**TAMILNADU CORPORATION FOR DEVELOPMENT OF WOMEN LTD.,**

(A GOVERNMENT OF TAMILNADU UNDERTAKING)

Anna Teresa Malagam, 1st Floor, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034.

கலைஞர் 100

1924 - 2023

# தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன மேலாண்மை இயக்குநரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திருமதி. ச. திவ்யதர்சினி, இ.ஆ.ப.,

செ.மு.ஆ.எண்: 398/PC–1/2024 நாள்: 29.06.2024

பொருள்: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் – கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவு – மாவட்டங்களில் "இரத்த சோகை இல்லாத கிராமம்" குறித்த சிறப்பு பிரச்சாரம் – சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா போட்டிகள் – நான்கு நிலைகளில் நடத்துதல் – விதிமுறைகள் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகள் அனுப்புதல் – சார்பு.

பார்வை :

1. 2024–25ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட வருடாந்திர செயல் திட்டம் (AAP – NRLM – B.2.8.3.2,3,4,5.)
2. மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பாணை எண். 10, நாள் : 27.06.2024.

************

பார்வை 2ல் காணும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பாணை எண். 10ன்படி, கிராமப்புறங்களில் வாழும் குழந்தைகள், வளரிளம் பருவத்தினர், கர்ப்பிணிப்பெண்கள், பாலுட்டும் தாய்மார்கள் மற்றும் முதியோர்கள் ஆகியோர் போதிய ஊட்டச்சத்து மற்றும் விழிப்புணர்வு இல்லாமல் பலவித நோய்களுக்கு ஆளாகின்றனர் குறிப்பாக இரத்தசோகையினால் பாதிக்கப்படுகின்றனர். இவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கத்தில் கூட்டாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு பிரிவின் மூலம் உணவு, ஊட்டச்சத்து, உடல் நலம், தன்சுத்தம் மற்றும் சுகாதாரம் பேணுதல் (FNHW) திட்டத்தின் மூலம் " **இரத்தசோகை இல்லாத கிராமம்" குறித்த சிறப்பு பிரச்சாரம் மற்றும் சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவுத் திருவிழா** கீழ்க்கண்ட நான்கு நிலைகளில் 37 மாவட்டங்களிலுள்ள 388 வட்டாரம் மற்றும் 12525 கிராம ஊராட்சிகளிலும் நடத்த அறிவிப்பாணை 27.06.2024 அன்று வெளியிடப்பட்டது.

சிறுதானியம் மற்றும் பாரம்பரிய உணவு திருவிழா நடத்துவதன் மூலம் கிராமப்புறங்களில் உள்ள அடிதட்டு மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு நிலையான ஆரோக்கியத்தைப் பேணும் வகையில் உள்ளூரில் கிடைக்கும் சிறுதானியங்கள்,

கீரைவகைகள், காய்கறிகள் மற்றும் பழங்களை கொண்டே சரிவிகித உணவை பெறுவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்

நுண்ணூட்டச்சத்து குறைபாடு, இரத்தசோகையினால் ஆண்டுதோறும் இலட்சக்கணக்கான பெண்கள், குழந்தைகள் வளரிளம் பெண்கள், கர்ப்பிணிகள் மற்றும் முதியோர்கள் பாதிக்கப்படுவதை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவதே ஆகும்.

1) கிராம ஊராட்சி அளவில்
2) வட்டார அளவில்
3) மாவட்ட அளவில்
4) மாநில அளவில்

| வ. எண் | பிரச்சாரத்தின் தன்மை | செலவின தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி அளவில் – (12525) | 125.25 |
| 2 | வட்டார அளவில் (388 வட்டாரம்) | 38.80 |
| 3 | மாவட்ட அளவில் (37) | 11.10 |
| 4 | மாநில அளவில் | 5.00 |
| | **மொத்தம்** | **180.15** |

கிராம ஊராட்சி அளவில் நடைபெறும் பாரம்பரிய உணவுத் திருவிழாப் போட்டிக்கு ஊராட்சிக்கு ரூ.1000/– வீதமும், வட்டார அளவில் நடைபெறும் போட்டிக்கு வட்டாரத்திற்கு ரூ.10,000/– வீதமும் மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்கு மாவட்டத்திற்கு ரூ.30,000/– வீதமும் மாநில அளவிலான போட்டிக்கு ரூ.5.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.180.15 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பாரம்பரிய உணவுத் திருவிழாப் போட்டிகளை சிறப்பாக நடத்தி முடித்திட இச்செலவினத்தை 2024–25ம் ஆண்டு AAP–ல் FNHW ஒதுக்கீட்டில் NRLM B.2.8.3.2,3,4,5 தலைப்பில் நிதி ஒதுக்கீடு பின்னர் வழங்கப்படும்.

**இரத்தசோகை இல்லாத கிராமங்கள் குறித்த சிறப்பு பிரச்சாரத்தில் கடைபிடிக்க வேண்டியவை:**

1. தொற்றா நோய் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மகளிர் சுகாதார தன்னார்வலர்கள் (WHV) மற்றும் சமுதாய வள நபர்களை கொண்டு ஊராட்சி அளவில் அனைத்து குழுக்களுக்கும் ஏற்படுத்துதல்.
2. ஊட்டச்சத்து தோட்டங்களை வீட்டின் பின்புறத்திலும், காலி இடங்களில் அமைத்து கீரை, காய்கறி விதைகள் தூவப்பட வேண்டும். ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ஊட்டச்சத்து தோட்டங்களை அமைத்திட ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளும், சமுதாய வள நபர்களும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

3. ஊட்டச்சத்து தோட்டங்களின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வு மற்றும் உணவுமுறை பன்முகத்தன்மையை குடும்ப அளவில் ஊக்குவித்தல்.
4. ஸ்டால்கள், கண்காட்சிகள், போஷன் அபியான் நிகழ்வுகள், பாரம்பரிய உணவுத்திருவிழா மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களின் FNHW நியூட்ரி நிறுவனங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்துதல் மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
5. ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நடத்தை மாற்றங்கள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.
6. முருங்கை, நெல்லி, பப்பாளி மற்றும் எலுமிச்சை போன்ற மரக்கன்றுகளை வழங்கப்பட வேண்டும்.
7. ஊட்டச்சத்து நிறைந்த 10 உணவுக்கூறு தொகுதிகளை காட்சிப்படுத்துதல், அதில் குறைந்தப்பட்சம் 5 உணவுக்கூறு தொகுதிகளை தினசரி உணவில் சேர்த்துக்கொள்ள விழிப்புணர்வு செய்தல்.

**நிதி விடுவிப்பு முறை:**

| | |
|---|---|
| ஊராட்சி அளவிலான போட்டிகள் | ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு வழியாக நடத்தப்பட வேண்டும். (வட்டார இயக்க மேலாண்மை அலகு மூலம் நிதி விடுவிக்கப்பட வேண்டும்) |
| வட்டார அளவிலான போட்டிகள் | வட்டார அளவிலான கூட்டமைப்பு வழியாக நடத்தப்பட வேண்டும். (வட்டார இயக்க மேலாண்மை அலகு மூலம் நிதி விடுவிக்கப்பட வேண்டும்) |
| மாவட்ட அளவிலான போட்டிகள் | திட்ட இயக்குநர் மற்றும் உதவி திட்ட அலுவலர் (P&C) அவர்களால் நடத்தப்பட வேண்டும். |

**நிதி பயன்பாட்டு முறை :**

சிறுதானியங்கள் மற்றும் பாரம்பரிய உணவுத்திருவிழா போட்டிகள் நடத்துதல்

| | | |
|---|---|---|
| ஊராட்சி அளவிலான போட்டிகள் | ரூ.1000/- (ஊராட்சி ஒன்றுக்கு) | முதல் மூன்று இடங்களை பெற்றவர்களுக்கு சான்றிதழ் மற்றும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளுக்காக |
| வட்டார அளவிலான போட்டிகள் | ரூ.10,000/- (வட்டாரம் ஒன்றுக்கு) | முதல் பரிசு : ரூ. 2500/-<br>இரண்டாம் பரிசு : ரூ. 2000/-<br>மூன்றாம் பரிசு: ரூ. 1500/-<br>+ வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்<br>இதர செலவினங்களுக்கு மற்றும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளுக்கு ரூ.4000/- |
| மாவட்ட அளவிலான போட்டிகள் | ரூ.30,000/- | முதல் பரிசு : ரூ. 5000/-<br>இரண்டாம் பரிசு : ரூ. 4000/-<br>மூன்றாம் பரிசு: ரூ. 3000/- |

| | | |
|---|---|---|
| | | சிறப்பு பரிசு ரூ 5000 (2 நபருக்கு ரூ.2500 வீதம்)<br>ஆறுதல் பரிசு ரூ 6000/- (3 நபருக்கு ரூ.2000 வீதம்)<br>+ வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்<br>இதர செலவினங்களுக்கு ரூ.4000/-<br>விழா ஏற்பாடு மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கான செலவினம் ரூ.3000/- |
| மாநில அளவிலான போட்டிகள் | ரூ.5,00,000/- | முதல் பரிசு : ரூ. 25,000/-<br>இரண்டாம் பரிசு : ரூ. 20,000/-<br>மூன்றாம் பரிசு: ரூ. 15,000/-<br>சிறப்பு பரிசு ரூ 20,000 (2 நபருக்கு ரூ.10,000 வீதம்)<br>ஆறுதல் பரிசு ரூ 24,000/- (3 நபருக்கு ரூ.8000 வீதம்)<br>+ வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்<br>இதர செலவினங்களுக்கு ரூ.1,96,000/-<br>விழா ஏற்பாடு மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கான செலவினம் ரூ.2,00,000/- |

மேலும், பாரம்பரிய உணவு திருவிழா போட்டிக்கான கால அட்டவணை திட்ட இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்டு மற்றும் விதிமுறைகளை முறையாக பின்பற்றப்பட வேண்டும். போட்டிகளை சிறப்ாக நடத்தி மக்களிடையே இரத்தசோகை இல்லாத குடும்பங்கள், கிராமங்களை உருவாக்கவும் மற்றும் உணவு மற்றும் ஊட்டச்சத்து குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும், குடும்ப அளவில் சமூக நடத்தை மாற்றங்களை ஏற்படுத்திட, பிரச்சாரங்கள் நடத்தி வெற்றிப்பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழுங்கி கௌரவிக்க இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

ஓம்/-
மேலாண்மை இயக்குநர்
த.நா.ம.மே.நிறுவனம்

//உண்மை நகல் உத்தரவுபடி//

கூடுதல் இயக்குநர் (P&C)
த.நா.ம.மே.நிறுவனம்